IntSym 2019
9th International Symposium

# இஸ்லாத்தில் பெண்ணுரிமையும் தற்கால முஸ்லிம் சமூகத்தில் அதன் செல்வாக்கும்: களுத்துறை முஸ்லிம் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**M.S.F. Nisfa**[112]

Correspondence: amna7201@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வுலகில் மனிதனைப் படைத்த அல்லாஹ், அவன் சீரிய வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக சட்டங்களை அருளினான். இச்சட்டங்களில் மனிதனால் சேர்க்கப்பட்ட, அழிக்கப்பட்டஇ திருத்தப்பட்ட சட்டங்கள் என எதுவும் இல்லை. இச்சட்டங்கள் பெரும்பாலும் மனிதனை ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்திருப்பதோடுஇ சிலவேளைகளில் மனிதனின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவையே முக்கிய காரணமாயமைகின்றன. இவ்வகையில் பெண்களின் விடயத்தில் அல்குர்ஆன் பல இடங்களில் எச்சரிக்கை செய்கின்றது. நபி (ஸல்) அவர்கள் பல தடவைகள் இது தொடர்பில் ஸஹாபாக்களுக்கு அறிவுரை கூறியிருக்கிறார்கள். முன்மாதிரியாக வாழ்ந்தும் காட்டியிருக்கிறார்கள். பெண்களின் விடயத்தில் நீதமற்றுஇ அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறு செய்வோருக்கான தண்டனைகளை பல சந்தர்ப்பங்களில் குறித்துக் காட்டியுள்ளார்கள். இவ்வாறே தனது இறுதி ஹஜ் பேருரையாம் ஹஜ்ஜதுல் விதா∴விலும் கூட பெண்ணுரிமை தொடர்பில் சில முக்கிய அறிவுரைகளை எடுத்துரைத்தார்கள். இது இவ்வாறிருக்க தற்கால எமது முஸ்லிம் சமூகமானது இதனைப் புறக்கணிப்போராகவும்இ பெண்ணுக்குரிய உரிமைகளை சரியான முறையில் வழங்காது தன் மனம் போன போக்கில் அவர்களை நடாத்துவோராகவும் உள்ளனர். அத்தகைய ஆண்களின் மனோநிலையை மாற்றிஇ அவர்களை இஸ்லாமிய சட்டத்தின்பால் வழிநடாத்துவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வானது முதற்தர தரவுகளான நேர்காணல்இ அவதானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுப் பிரதேசத்தில் பெரும்பாலும் பெண்கள் உரிமைகள் மீறப்பட்டோராக இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையினை சீர்செய்வதற்காக இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலான பெண்களின் உரிமைஇ அதன் அவசியம் மற்றும் முக்கியத்துவம் என்பன எல்லா மட்டத்திலும் துறைசார் உலமாக்கள், சட்டத்தரணிகளின் துணைகொண்டு விளக்குதல்இ இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையிலான முன்மாதிரி குடும்பங்கள் உருவாக்கப்படுதல் என்பன போன்ற இன்னும் பல விதந்துரைகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன.

**பிரதான சொற்கள்:**: பெண்ணுரிமை, இஸ்லாமிய நிலைப்பாடு, களுத்துறை முஸ்லிம் பிரதேசம்

## ஆய்வின் அறிமுகம்

இஸ்லாத்திற்கு முன்னைய அறியாமைக் காலமானது பெண்களை அடிமைகளாகவே நடத்தியது. அவர்களது அடிப்படை உரிமைகள்கூட மறுக்கப்பட்டன. அவர்களை மனிதப் பிறவியாகக்கூட அவர்கள் மதிக்கவில்லை. குழந்தை பெறும் இயந்திரமாகவே அவர்கள் கருதப்பட்டனர். பிறக்கும் குழந்தை பெண் குழந்தையாகப் பிறந்தால் அதனை அந்நொடியே அழித்தொழித்தனர். அவர்களை வாழத் தகுதியற்றோராகவும் அச் சமூகம் கண்டது. சொத்தில் அவர்களுக்கு எப்பங்கும் வழங்கப்படவில்லை.

இவை அனைத்தையும் இல்லாதொழித்து, பெண்களுக்கான கண்ணியத்தை வழங்கி, அவர்களை சிறப்புக்குரியோராக்கி இஸ்லாம் பெண்களுக்கு சில உரிமைகளை வழங்கியது. அவற்றில் உயிர் வாழும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, சொத்தில் பங்கு பெறும் உரிமை என்பனவற்றை சில முக்கியமான உரிமைகளாகக் காணலாம்.

இஸ்லாம் இவ்வாறு பெண்களுக்கென உரிமைகளை வரையறுத்து கூறியபோதிலும் தற்கால களுத்துறை முஸ்லிம் சமூகமானது அதனைப் புறக்கணிப்போராகவே உள்ளனர். இஸ்லாம் பெண்களுக்கென உரிமைகளை வழங்கியுள்ளது என்பதனைக்கூட தெளிவாக அறியாதோராக அவர்களில் சிலர் காணப்படுகின்றனர்.

---

[112] Ahmad Ibrahim Kulliyyah of Laws, International Islamic University of Malaysia.

அத்தகைய ஆண்களின் மனோநிலையை மாற்றி, அவர்களை இஸ்லாமிய சட்டத்தின்பால் வழிநடாத்துவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். இவ்வாய்வில் முக்கியமாக களுத்துறை முஸ்லிம் பிரதேசத்தில் பெண்ணுரிமை துஷ்பிரயோகம் செய்யப்படும் வழிமுறைகள் இனங்காணப்பட்டன. அத்துடன் அதன் விளைவுகளும் அதனை நிவர்த்திப்பதற்கான வழிவகைகளும் கண்டறியப்பட்டன.

அத்துடன் இந்த ஆய்வினை செவ்வனே செய்து முடிப்பதற்காக நேர்காணல், அவதானம் ஆகிய இரு தரவு சேகரிப்பு முறைகளில் தரவுகள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டன.

**ஆய்வுப் பிரச்சினை**

பெண்ணுரிமை தொடர்பில் அல்குர்ஆனும், ஸுன்னாவும் பல கட்டளைகளை விதித்திருந்த போதிலும் தற்கால களுத்துறை முஸ்லிம் சமூகமானது இதனை புறக்கணிப்போராக, அறிந்தும் அறியாதது போல பெண்களை நடாத்துகின்றனர். இத்தகைய நிலைமைகள் சீர் செய்யப்பட வேண்டும்.

**ஆய்வு முறைமை**

இந்தப் பண்புசார் ஆய்வுக்கான தகவல்கள் இரு வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டன.

**(அ) அவதானம்**

ஆய்வுப் பிரதேசத்தில் நீண்ட காலம் ஆய்வாளர்கள் வசித்துள்ள நிலையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவே இது அமைந்துள்ளது.

**(ஆ) நேர்காணல்**

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள புத்திஜீவிகளிடமும் சமூகத் தலைவர்களிடமும் இது தொடர்பாக நேர்காணல் செய்து பெற்ற தகவல்களும் இதற்கு உதவின.

இவ்வாறு முதற்தர தரவுகளை (Primary)கொண்டு இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு இஸ்லாமிய சட்டங்கள் மற்றும் தற்கால முஸ்லிம் சமூகத்தினது நடைமுறை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. களுத்துறை பிரதேச முஸ்லிம்களை இத்தவறான நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்காக எவ்வாறான ஆலோசனைகளை வழங்கலாம் எனவும் நோக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பெறப்பட்ட சில முன்மொழிவுகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் இலக்குகள்**

- பெண்களின் உரிமைகள் எந்தெந்த விதங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்நது என்பதை ஆராய்தல்.
- ஆண்களின் மனோநிலையை மாற்றி, அவர்களை இஸ்லாமிய சட்டத்தின்பால் வழிநடாத்தல்

**களுத்துறை முஸ்லிம் சமூகத்தில் பெண்ணுரிமை துஷ்பிரயோகம் செய்யப்படும் வழிமுறைகள்**

களுத்துறை முஸ்லிம் பிரதேசத்தில் எத்தகைய வழிமுறைகளில் பெண்கள் தமது உரிமைகளை இழந்துள்ளனர் என்பதை பின்வருமாறு விளக்கலாம்.

**பெரும்பாலும் பெண்கள் திருமணத்தின்பின் தமது கல்வியையோ, தொழிலையோ தொடர அனுமதிக்கப்படாதிருத்தல்**

களுத்துறை முஸ்லிம் சமூகமானது பெரும்பாலும் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற போதிலும் திருமணத்தின் பின்னர் பெண்களால் அவர்களது கல்வியைத் தொடர முடியாமல்

உள்ளது. பெரும்பாலும் கணவன் தன் மனைவியை வெளியிடங்களுக்கு சென்று கல்வி கற்பதற்கு அனுமதிப்பதில்லை. பெண்ணானவள் வீட்டு வேலை செய்வதிலும் பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பதிலுமே கரிசனை காட்ட வேண்டும் என்பது அவர்களது வாதமாக இருக்கின்றது. அத்துடன் பெண் படித்து என்ன செய்ய போகிறாள் என்ற மனநிலை கொண்டோராகவே அதிக பெற்றோரும் கணவன்மார்களும் உள்ளனர்.

**தொழில் செய்யும் பெண்கள் தமது செல்வத்தை தாம் விரும்பியவாறு செலவளிக்க முடியாத நிலை**

சில பெண்கள் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டாலும் தாம் சம்பாதிப்பவற்றை செலவு செய்ய அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. தான் விரும்பியவாறு தனது பெற்றோருக்கு, உடன் பிறப்புக்களுக்கு தனது செல்வத்தை வழங்க அவர்களால் முடியாமல் உள்ளது. இவ்விடயத்தில் பெண்ணின் உரிமை முழுமையாக மீறப்படுகின்றது.

**பெண்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான உரிமை வழங்கப்படுவதில்லை**

பெண்கள் எவ்வளவு தான் கல்வி அறிவைப் பெற்றிருந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் தவறாகவே நடாத்தப்படுகின்றனர். இஸ்லாம் பெண்ணுக்கு கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை வழங்கியிருந்த போதிலும் இது ஏனையோரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதையே நாம் பார்க்கலாம். சில முக்கிய தருணங்களில்கூட அவர்களால் தமது கருத்தை வெளியிட அனுமதிக்கப்படுவதில்லை.

**பெண்கள் தமக்கான மஹர் தொகையை தமது விருப்பத்தின்பேரில் பெற முடியாதநிலை**

இஸ்லாம் பெண்ணுக்கு மஹர் தொகையை தனது விருப்பம் போல கேட்டுப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியிருக்கின்றது. ஆயினும் தற்கால களுத்துறை முஸ்லிம் சமூகத்தில் அந்த அனுமதி பெரும்பாலும் மறுக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது. ஆண்களில் ஒரு சிலரே தான் திருமணம் முடிக்கப்போகும் பெண் எதனை, எந்தளவு தொகையை மஹராகப் பெற்றுக்கொள்ள விரும்புகிறாள் என்பதை அறிய முற்படுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் தாம் விரும்புவதை கூற சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை

**மனைவியின் இரகசியங்களைப் பகிரங்கப்படுத்தல்**

அதிக பெண்கள் மனவேதனைக்கு உள்ளாகியிருப்பது கணவன்மார்களின் இது போன்ற செயல்களால்தான். மனைவியின் இரகசியங்களைப் பாதுகாப்பது கணவனின் கடமை. மனைவி பிழை செய்தால் அவனே அதனை முறையாக பேசி தீர்க்க வேண்டும். இஸ்லாமிய வழிமுறைகளைப் பேண வேண்டும்.

ஆயினும் தற்கால களுத்துறை முஸ்லிம் சமூக ஆண்கள் தமது மனைவியரின் குறைகளை மனைவியிடம் கூறாது அவரது பெற்றோர் உறவினர் ஊரார் என அனைவரிடமும் பகிர்ந்து கொள்கின்றனர்.

**பிறர் முன்னிலையில் மனைவியைக் கடிந்து கொள்ளல்**

பெரும்பாலும் கணவன்மார் தமது மனைவியரை தனியான இடத்தில் வைத்து கண்டிப்பதில்லை. பெண்கள் தவறிழைக்கும் பட்சத்தில் அதனை ஏனையோர் முன்னிலையிலே பகிரங்கப்படுத்தி ஏனையோரிடமே அதற்கான நியாயத்தைப் பெற முனைகின்றனர். இது தவறான அணுகுமுறை என்பதை அவர்கள் உணர்வதில்லை.

**பெண்களின் உரிமைகள் சரியாக வழங்கப்படாமைக்கான காரணங்கள்**

பெண்களின் உரிமைகள் சரியாக வழங்கப்படாமைக்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

**பெண்ணுரிமை தொடர்பான இஸ்லாமிய நிலைப்பாட்டை அறியாதிருத்தல்**

இஸ்லாம் பெண்களுக்கான சில உரிமைகளை வழங்கியுள்ளது. பெண்ணுரிமை மறுக்கப்படுவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஆயினும் தற்கால முஸ்லிம் சமூகமானது இதனை அறியாதோராகவும் அறிந்தும் புறக்கணிப்போராகவும் உள்ளனர்.

**பெண்களுக்கென சில உரிமைகளை வழங்குவது மார்க்கத்திற்கு முரணானது என நம்புதல்**

பெண்கள் சுதந்திரமாக இருப்பது, பெண்களுக்கான உரிமைகளை வழங்குவது போன்றன இஸ்லாத்தில் கூறப்படாத மார்க்கத்திற்கு முரணான ஒரு விடயம் என சிலர் எண்ணுகின்றனர். இதனால் அவர்கள் பெண்களை அடிமைபோல வீட்டிலேயே வைத்திருக்கும் நிலையை நாம் கணக்கூடியதாக உள்ளது.

**பெண் எப்போதும் வீட்டிலேயே அடைந்து இருக்க வேண்டும் என்ற மனோநிலை**

பெண்ணானவள் முழுமையாக தன்னை மறைத்து வீட்டிலேயே ஒடுங்கி இருக்க வேண்டும். பிள்ளைகளை வளர்த்தல் வீட்டு வேலைகளை செய்தல் கணவனுக்கு பணிவிடை செய்தல் என்பனவே அவளது கடமை என சிலர் எண்ணுகின்றனர். இதனால் கல்விக்காகவோ, தொழிலுக்காகவோ அவர்களை வெளியே அனுப்பாது வீட்டிலே அடங்கி இருக்கச் செய்கின்றனர்.

**சமூகத்திலுள்ள ஏனையோரின் தப்பான அறிவுறுத்தல்களைப் பின்பற்றல்**

பொதுவாக திருமணத்தின்பின் கல்விக்காக வெளியே செல்லும் பெண்களைப் பற்றி அவதூறு கூறுபவர்கள் இப்பிதேசத்தில் அதிகம் காணப்படுகின்றனர். இத்தகையோர் குறித்த கணவனிடத்திலும் இதனை தவறாக கூறி அவர்களது வாழ்வில் சிக்கலைக் கொண்டுவர முனைகின்றனர். இத்தகையோரின் கருத்துக்களை செவிமடுக்கும் கணவன் தவறாக வழிநடத்தப்பட்டு அதனை தனது மனைவி மீது திணிக்க முற்படுகிறான். இதனால் பெண்ணானவள் தனது கல்வியை தொடர முடியாத நிலை உருவாகின்றது.

**தனது உரிமைகளை தவறாக பிரயோகித்த பெண்களால் சமூகத்தில் உள்ள விரக்திநிலை**

சில பெண்கள் கல்வி கற்க, தொழில் செய்ய உரிமைகள் வழங்கப்பட்டபோது அதனை அவர்களில் சிலர் தவறான முறையில் பிரயோகித்துள்ளனர். அதாவது தவறான நட்பினாலும், ஆண், பெண் தொடர்பினாலும் குடும்பத்திலும் சமூகத்திலும் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதனால் விரக்தியடைந்த களுத்துறை முஸ்லிம் சமூகமானது பெண்களை பெரும்பாலும் கல்வி, தொழிலுக்காக அனுமதிக்காமல் தடுத்துள்ளமையை காணக்கூடியதாக உள்ளது.

**பெண்களுக்கான உரிமைகள் சரியாக வழங்கப்படாமையினால் ஏற்பட்டுள்ள விளைவுகள்**

பெண்களின் உரிமைகள் சரியாக வழங்கப்படாமையினால் பல விளைவுகளை களுத்துறை முஸ்லிம் சமூகமானது சந்திக்க வேண்டியேற்பட்டுள்ளது.

**திருமண வாழ்க்கை குறித்து பெண்கள் விரக்தி நிலைக்கு உள்ளாதல்**

திருமணத்தின் பின்னர் தமது சுதந்திரம் இழக்கப்படுவதை உணரும் பெண்கள், திருமண வாழ்க்கை குறித்து அதிருப்தி அடைகிறனர். கணவன் வீட்டில் கணவனது பெற்றோருடன் வசிக்கும் பெண்கள் தமது பெற்றோரின் வீடுகளுக்கு அடிக்கடி சென்று வருவதற்கோ, தமது தாய் தந்தையர் சுகயீனமுற்று இருக்கும் சந்தர்ப்பத்தில், தமது உறவினர் துன்பங்களில் துவண்டு இருக்கும் சந்தர்ப்பங்களில் சென்று அவர்களுக்கு ஆறுதலாக இருக்க முடியாதநிலை பல பெண்களுக்கு உருவாகியுள்ளது. அத்துடன் வீட்டு வேலைகளிலேயே அவர்களது முழு நாளும் செலவு செய்யப்படுகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான விடயங்களால் பெண்கள் திருமணம் குறித்து தவறான ஒரு மனப்பதிவைக் கொண்டுள்ளனர்.

**கல்வி கற்கும் விடயத்தில் பெண்கள் ஊக்கம் அற்றிருத்தல்.**

கல்வி கற்பது ஆண் பெண் இரு சாராரக்குமான கடமை என ஹதீஸ் கூறுகின்றது. ஆயினும் களுத்துறை பிரதேச பெண்களில் பெரும்பாலானோர் தாம் எவ்வளவுதான் படித்து பட்டம் பெற்றாலும் திருமணத்தின்பின் அதனால் எப்பயனும் இல்லாமல் போகின்றது. படித்து தொழில் பெற தாம் எப்போதும் அனுமதிக்கப்பட மாட்டோம் என பல பெண்கள் கருதுவதனால் அவர்கள் கல்வியில் கரிசனை அற்றோராக, உந்துதல் அற்றோராக காணப்படுகின்றனர்.

**பெற்றோர் தமது பெண் பிள்ளைகளின் கல்வியை இடைநடுவே நிறுத்தல்**

திருமணத்தின் பின்னரான பெண்பிள்ளைகளின் வாழ்வு வீட்டிலேயே அடங்கி அமையப்போகிறது என்பதை உணரும் பெற்றோர் தாம் பெண்பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதால் எப்பயனுமில்லை எனக் கருதி பிள்ளைகளின் கல்வியை ஒரு கட்டத்தோடு மட்டுப்படுத்துகின்றனர்.

**உளவியல் ரீதியான பாதிப்பு**

இவ்வாறு சில அடிப்படை உரிமைகளைக்கூட இழந்து வரும் பெண்கள் ஒரு விதமான விரக்தி நிலைக்கு உள்ளாகி இருக்கின்றனர். இதனால் எப்போதும் கணவன்மீது கோபத்தை வெளிக்காட்டுவோராகவும், கணவன் மற்றும் ஏனையோர் மீதுள்ள கோபத்தினால் தனது பிள்ளைகளை அடித்து துன்புறுத்துவோராகவும், சமூகத்தில் உள்ள ஏனைய பெண்களையும் ஊக்கப்படத்தாதோராகவும் உள்ளனர். அத்துடன் தமது சொந்த பெண் பிள்ளைகளைக்கூட படிக்க விடாது இருக்கின்றமையையும் காணலாம்.

**முன்மொழிவுகள்**

களுத்துறை பிரதேசத்தில் பெண்களின் உரிமைகள் பேணப்பட வேண்டிய அவசியம் உணர்ந்து அதனை நடைமுறைப்படுத்த பின்வரும் விதந்துரைகள் முன்வைக்கலாம்.

**முக்கியத்துவம் உணர்த்தப்படல்**

முதலில் இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையிலான பெண்களின் உரிமைகளை பின்பற்றுவதன் அவசியம் களுத்துறை பிரதேச மக்களால் உணரப்பட வேண்டும். இதன் முக்கியத்துவம் அவர்கள் உணரப்படாமைக்கான முக்கிய காரணங்களாக இது பற்றிய தெளிவின்மை, அலட்சியம், பிரதேச மரபு என்பவற்றைக் கூறலாம். மேலும் பள்ளிவாசல்கள், பாடசாலைகள், மத்ரஸாக்கள், இஸ்லாமிய இயக்கங்கள் இது விடயத்தில் காத்திரமான பங்கை வழங்க முடியும். குறிப்பாக குர்ஆனின் அடிப்படையில் விதியாக்கப்பட்ட ஒரு விடயமே இது என்பதையும் உணர்த்த வேண்டும்.

**விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தல்**

இஸ்லாமிய பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வு களுத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியத் தேவையாக உள்ளது. இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதனூடாக அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து நீங்கி சமூகத்தில் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும். சமூகத்தில் பெண்ணுரிமை பற்றிய தெளிவை மாணவர்கள், ஆசிரியர்கள், படித்தவர்கள், பாமரர்கள் என எல்லா மட்டத்திலும் துறைசார் உலமாக்கள், சட்டத்தரணிகள் இஸ்லாமிய ரீதியாக வழங்க வேண்டும். இது பற்றிய தெளிவை வழங்குவதற்கென விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைப் பரவலாக செய்தல் சிறந்ததாகும்.

அத்துடன் பெண் பிள்ளைகள் உரிமைகள் வழங்கப்பட்டோராக, ஆளுமை மிக்கோராக இருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தி பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வழிசெய்ய வேண்டும்.

**விசேட வகுப்புக்களை நடாத்தல்**

பெண்கள் பற்றிய இஸ்லாமிய சட்டமும் பெண்களின் சிறப்பு, அவர்களின் உரிமைகள் பற்றிய சட்ட ஒழுங்கும் கஞத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் மிகப் பரவலாக விளக்கப்பட வேண்டும். இவ்விரு சட்டப் பகுதிகளும் குடும்பத்தின் நெருங்கிய உறவுக்கு காரணமாக அமைவதை சுட்டிக்காட்ட வேண்டும். பயான் நிகழ்ச்சிகள், குத்பா பிரசங்கங்கள் என்பன மூலம் இதுபற்றிய தெளிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்தலாம். மேலும் ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் என விசேட அமைப்பொன்றை ஸ்தாபித்து இஸ்லாமிய பெண்ணுரிமை பற்றிய விளக்கம் அளிக்கப்பட வேண்டும்.

**பெண்ணுரிமை தொடர்பான தவறான மனப்பதிவை அகற்றல்**

பெண்ணுரிமை பற்றிய தவறான மனப்பதிவை கஞத்துறை பிரதேச முஸ்லிம் சமூகத்திலிருந்து எடுத்தெறிவது மிக முக்கியமான ஒரு விடயமாகும். இதற்காக இஸ்லாமிய பெண்ணுரிமை தொடர்பான அல்குர்ஆன் ஸுன்னாவின் விளக்கம், அதன் மேன்மை போன்றன விளக்கப்பட வேண்டும்.

**முன்மாதிரி குடும்பங்களை உருவாக்கல்**

மார்க்கப் பொறுப்புதாரிகள் பெண்ணுரிமை தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஓர் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். இதற்காக இஸ்லாமிய பெண்கள் தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய முன்மாதிரி குடும்பங்கள் உருவாக்கப்பட்டு நடைமுறையில் அதனை பிரித்துக் காட்ட வேண்டும்.

**முஸ்லிம்களை ஷரீஆ சட்டங்களின்படி வாழ வழிசெய்தல்**

இஸ்லாமிய சட்டத்திற்கு மாற்றமான சட்டங்களையும் சம்பிரதாயங்களையும் பின்பற்றுவது பித்அத்தாகும். மார்க்கத்தில் இல்லாத ஒன்றை செய்த குற்றம் அத்தகைய மனிதனையே சாறும் என்ற விடயம் உணர்த்தப்பட வேண்டும். இஸ்லாத்திற்கு முரணான நடைமுறைகள், வழக்காறுகள் ஒழிக்கப்பட்டு இஸ்லாமியரீதியான வாழ்வை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும். அத்துடன் முஸ்லிம்களது ஈமானை பலப்படுத்தி, ஆன்மீக சிந்தனையை கூட்டி, சுயநல சிந்தனைகளை நீக்கி, மார்க்கத்தோடு தொடர்பை கூட்ட வேண்டும். அத்துடன் முஸ்லிம்களை இஸ்லாத்தோடு இணைப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும்.

**பெண்கள் தொடர்பான கல்வியை கீழ் மட்டத்திலிருந்து ஊட்டல்**

அஹதிய்யா, பாடசாலைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என எல்லா மட்டத்திலும் பெண்கள் தொடர்பான சட்டத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். மேலும் சமூகத்தில் கீழ் மட்டத்தில் இருப்போருக்கும் உரிமைகள் இருக்கும். ஆனால் அது பற்றிய அறிவின்றி இருப்பர். அவர்களுக்கு அவர்களது தரத்தில் நின்றே விளக்க வேண்டும். அத்துடன் புத்தகங்கள் வாசிக்கும் அளவு கூட அறிவில்லாதோர் இருப்பர். அவர்களது மஹல்லாவை அடிப்படையாக வைத்து அவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வுகளை எளிய முறையில் ஒழுங்கமைக்க வேண்டும். அத்துடன் விசேட வகுப்புக்கள் பயிற்சி நெறிகள் மூலம் வயது வந்த ஆண்கள் பெண்களுக்கு இது பற்றி அறிவூட்டல் மிக முக்கியமானது.

**கண்டறிந்தவை**

கஞத்துறை பிரதேச முஸ்லிம்களில் பலர் பெரும்பாலும் பல வகைகளிலும் இஸ்லாமிய சட்டத்தை மையமாக கொண்டதாக தமது வாழ்வை அமைத்துக் கொண்டாலும் பெண்களுக்கான உரிமைகளை வழங்குவது தொடர்பில் விழிப்புணர்வற்று

காணப்படுகின்றனர். சமூகப் பொறுப்பு மிக்க தலைவர்கள் இது விடயத்தில் கரிசனை கொண்டு செயற்படுவதன் மூலம் சமூகத்தில் பாரியதொரு மாற்றத்தை கொண்டுவர முடியும்.

**ஆய்வு முடிவுரை**

பெண்கள் தொடர்பான விடயங்களில் அல்லாஹ்வின் வசனங்கள் மிகத் தெளிவாக நிர்ணயிக்கப்பட்டனவாகவும் பாரதூரமானவையாகவும் இருந்தபோதிலும் அதன் அவசியம் ஆய்வுப் பிரதேசமாகிய களுத்துறை பிரதேச முஸ்லிம்களால் உணரப்படாமல் உள்ளது. மேற்கூறப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தை மாற்றுவதற்கான வழிவகைகளை செயற்படுத்துவதன் ஊடாக நிச்சயம் ஆண் பெண் உறவை வலுப்படுத்தி முஸ்லிம்களின் ஈமானை பலப்படுத்தி, அதனை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கான வழிகளை மேற்கொள்ளலாம். இதனால் முஸ்லிம் சமூகத்தில் மிகச் சிறந்ததொரு மாற்றத்தைக் கொண்டுவர முடியும் என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

**உசாத்துணைகள்**

அரபாத் கரீம். எம்.ஜே.எம்.,(2012). **“இஸ்லாத்தில் வாரிசுரிமைச் சட்டம்”,** பேருவளை: நதா பப்ளிகேஷன்.

Abdul Rahman al Sheha, Human Rights in Islam and Common Misconceptions, Revised Edition

Sayed Sikandar Shah Haneef, Najibah Mohd Zin, Mek Wok Mahmud (2016), Issues on Harmonization of Human Rights in Islam, 1st ed., IIUM Press.

Abdul Ghafur Hamid @ Khin Maung Sein (2012), Basic Documents in International Law, 4th ed., Harun M. Hashim Law Center

Angela Heraty and Siobhan Leonard (1999), A Human Rights: An Agenda for the 21st Century, 1st ed., Cavendish Publishing Limited, London

David Harris (2010), International Human Rights Law, Oxford University Press

International Commission of Jurists, University of Kuwait and Union of Arab Lawyers (1982), Human Rights in Islam

**நேர்காணல்**

சம்லா. எம்.எஸ்.எப்.,(முகாமைத்துவ உதவியாளர்), 2019.06.20, நேரம் மாலை 7.00-8.00, களுத்துறை.

நுஸ்ரா. எம்.எஸ்.எப்.,(ஆசிரியை), 2019.06.02, நேரம் காலை 9.00-10.00, களுத்துறை

நுஸ்லா. எம்எஸ்.எப்.,(பல்கலைக்கழக மாணவி), 2019.06.24, நேரம் காலை 10.00-10.30, களுத்துறை

ருஷ்தா. எம். ஆர். எப்.,(மருத்துவர்), 2019.07.01, நேரம் காலை 8.00-8.30, களுத்துறை

ஸப்ரா. எம்.எஸ்.எப்.,(குடும்ப பெண்), 2019.06.17, நேரம் பி.ப 6.00-6.30, களுத்துறை

ஸாரா. எம்.எஸ்.எப்,(பாடசாலை மாணவி), 2019.06.20, நேரம் பகல் 2.00-3.00, களுத்துறை